இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 03.01.2026

# பழனிசாமியின் 150 ஆவது பொய்!

நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 ஆவது நாள் ஆக்குவோம் என்று சொல்லி இருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி. அவர் சொல்லும் 150 ஆவது பொய்யாக இதைச் சொல்லலாம்.

“நூறு நாள் வேலைத் திட்டம் ரத்து செய்யப்படுவதாக தவறான தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார். 100 நாள் வேலைத் திட்டத்தை மத்திய அரசு 125 நாளாக உயர்த்தி இருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும். ஊதியம் உயர்த்தப்பட்டு தடையில்லாமல் பணிகள் வழங்கப்படும்” என்று சொல்லி இருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

குடியுரிமைச் சட்டத்தால் எந்தச் சிறுபான்மையினரும் பாதிக்கப்பட மாட்டார்கள், மூன்று வேளாண் சட்டங்களால் எந்த விவசாயியும் பாதிக்கப்பட மாட்டார் என்று பா.ஜ.க.வின் அனைத்து சதித் திட்டங்களுக்கும் முட்டுக் கொடுத்த பழனிசாமி, இப்போது நூறு நாள் வேலைத் திட்டத்துக்கும் முட்டுக் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்.

**அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கியது மட்டும்தான் தவறு என்று ஒரு அறிக்கையை வெளியிட்டுக் கழன்று கொண்ட பழனிசாமி, இப்போது ஒட்டு மொத்தமாக ஒன்றிய அரசின் திட்டத்தை ஆதரிக்கத் தொடங்கி விட்டார். ரெய்டுகளுக்குப் பயந்தும், தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளவும் பழனிசாமி படும் பாடு பரிதாபமாக இருக்கிறது. அவரது அசிங்க அரசியல் ஒவ்வொரு விவகாரத்திலும் அம்பலப்பட்டு நிற்கிறது.**

2021 நவம்பர் மாதம், பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதில், “2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்ட ரூ.3524.69 கோடியில் மொத்தத் தொகையும் 15.09.2021 வரை தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைத்து முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதன் பிறகு இத்திட்டத்திற்கு நிதி ஏதும் விடுவிக்கப்படாத காரணத்தால், 1-11-2021 அன்றுள்ளவாறு 1178.12 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியம் வழங்கப்படாமல், நிலுவையாக உள்ளது” என்பதை அப்போது சொல்லி இருந்தார் முதலமைச்சர். அதன் பிறகுதான் நிதியை விடுவித்தார்கள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 4,034 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுக்காததைக் கண்டித்து தமிழ்நாடு முழுக்க மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்களை கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் தி.மு.க. நடத்தியது பழனிசாமிக்குத் தெரியுமா? 100 நாள்களுக்கான பணத்தையே பா.ஜ.க. தரவில்லை. அந்த பா.ஜ.க. 125 நாள் வேலை தரப் போகிறதாம். பழனிசாமி, 150 நாள் வேலை தரப்போகிறாராம். ‘கேட்பவன் கேனை என்றால் கேரளாவில் எருமை ஏரோப்ளேன் ஓட்டுதாம்’ என்று ஒரு பழமொழி உண்டு. அப்படித்தான் இருக்கிறது பழனிசாமியார் பேச்சும்.

ஒன்றிய அரசு 60 விழுக்காடு - மாநிலங்கள் 40 விழுக்காடு என நிதிப் பகிர்வு முறை என்று மாற்றப்பட்டு இருப்பது பழனிசாமிக்குத் தெரியுமா? ஒன்றிய அரசின் திட்டமானது மாநில அரசின் தலையில் 40 விழுக்காடு கட்டப்பட்டுள்ளது அவரது கண்ணுக்குத் தெரிகிறதா இல்லையா?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு 100 நாள் வேலைத் திட்டத்தில் 30 முதல் 40 நாட்கள் வேலைகள் தரப்பட்டது என்பது ‘நானும் ஒரு விவசாயி’ என்று சொல்லிக் கொள்ளும் பழனிசாமிக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் ஏதாவது கிராமத்துக்குச் சென்று அவரே கேட்கட்டும்! அவர்களிடம் போய் 150 நாள் வேலை தரப் போகிறேன் என்று சொல்லட்டும். அப்போது மக்கள் சொல்லும் பதில், அவர் இதுவரை வாழ்நாளில் கேட்காத பதிலாக இருக்கும்.

2021-ஆம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப்பணி அட்டைகள் நீக்கப்பட்டன. இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது. இதனை பழனிசாமியால் தடுக்க முடியுமா? தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும், அனைவர் உரிமைகளையும் காவு கொடுத்த முதுகெலும்பு இல்லாத பழனிசாமியால் இது முடியுமா?

எந்த மாநிலத்துக்கு எவ்வளவு தொகை என்பதை ஒன்றிய அரசு தான் இனி நிர்ணயம் செய்யும். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி கிடைக்கும், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு குறைவான நிதி கிடைக்கும் என்பதை நாடு அறியும்.

ஏன் ஒழுங்காகப் பணம் கொடுக்கவில்லை என்று மகாராஷ்டிரா, ஜார்கண்ட், மேற்கு வங்கம், பீகார், ராஜஸ்தான் மாநில ஆளுநர்களுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது பழனிசாமிக்குத் தெரியுமா?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் இந்தத் திட்டத்தை எந்த வகையில் எல்லாம் சிதைக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் சிதைத்தார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் முறையாக, முழுமையாகப் பணம் தரவில்லை.

இந்தியா முழுமைக்கும் 2021-22 இல் 98,468 கோடி ரூபாய் ஒதுக்கியது ஒன்றிய அரசு. 2023-24 நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதன் மூலமாக 100 நாள் வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊதியம் குறைக்கப்பட்டதை உணரலாம்.

எதிர்பார்க்கப்பட்ட பட்ஜெட் மதிப்பீடான ரூபாய் 73 ஆயிரம் கோடியை விட 18 சதவிகிதம் குறைவாகவும், 2022-23 நிதியாண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடான ரூபாய் 89 ஆயிரம் கோடி விட 33 சதவிகிதம் குறைவாகவும் இருந்ததை ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிபரங்களே சொல்கின்றன.

100 நாட்களுக்கு அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்றால் 2.72 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதை எந்த ஆண்டும் பா.ஜ.க. அரசு செய்யவில்லை.

**2.72 லட்சம் கோடி தர வேண்டிய இடத்தில் 60 ஆயிரம் கோடி கொடுத்தால் எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. எந்த நோக்கத்திற்காக 100 நாள் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டதோ, அத்திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு படுகொலை செய்து விட்டது. இப்போது அதற்கு பவுடர் போட்டுக் கொண்டு வருகிறார்கள். சோளக்காட்டு பொம்மைக்கு உயிர் ஊட்டிக் கொண்டிருக்கிறார் உளறல் பழனிசாமி.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், இந்து குழும இயக்குநர் என்.ராம் அவர்கள் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான் அவர்கள் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் ரூபி மனோகரன், அமிர்தராஜ், காங்கிரஸ் கட்சியின் அமைப்புச் செயலாளர் ராம் மோகன் ஆகியோர் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளி களுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மற்றும் டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் தீபக் நாதன் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2026) முகாம் அலுவலகத்தில், மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் சு.க. முருகவேல்ராஜன் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## திருவரங்குளத்தில் மாபெரும் கபடிப் போட்டி! அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைக்கிறார்!

*புதுக்கோட்டை, ஜன. 3- புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் நடத்தப்படும் மாபெரும் ஒரு ஊர் மின் ஒளி கபடி போட்டி ஜனவரி 3 ,4 சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி அளவில் ஸ்ரீ பிடாரியம்மன் கோவில் திடலில் நடைபெற உள்ளது.*

*விழாவிற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் போட்டிகளை துவக்கி வைக்கிறார். முன்னதாக அனைவரையும் திருவரங்குளம் தெற்குஒன்றிய திமுக செயலாளர் அரு. வடிவேல் வரவேற்க போட்டி ஏற்பாடுகளை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பால பிரபாகரன், பி.அஜய் ஒருங்கிணைப்பில் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இளைஞர் அணி மணிகண்டன் நன்றி கூறுகிறார்.*

*இந்நிகழ்வுகளில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

### பிரதமர் மோடி - ஒன்றிய கல்வி அமைச்சரின் பேச்சுகளுக்கு

## 2026-சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் பாடம் கற்பிப்பார்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, ஜன. 3– திருப்பரங்குன்றம் ‘தீபம் பிரச்சினை’யைத் திசை திருப்பி, தமிழர்களை முட்டாள்கள் என்றும், திருடர்கள் என்றும் வசைபாடும் வட நாட்டுத் தலைவர்களுக்கு, வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–**



தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் பெருந்தோல்வி கண்டு, முகத்தில் கரி பூசிக்கொண்ட பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர்கள் அல்லது சில தலைவர்கள் என்பவர்கள் அதிகார மமதையின் காரணமாகவோ அல்லது அறியாமையின் உச்சத்தினாலோ பொறுப்பற்ற முறையில், சற்றும் நாவடக்கம் இன்றி - தமிழ்நாட்டிற்கு வந்து, பேசி வருகிறார்கள் என்பது மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

மதுரைக்கு வந்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் என்பவர்,

“தீபத்தூணில் தீபம் ஏற்றுவதைத் தடுப்போர் முட்டாள்கள்” என்று சற்றும் பொறுப்பற்ற முறையிலும், பண்பற்ற தன்மையிலும் பேசியிருப்பது எவ்வளவு வன்மம் நிறைந்த ஒன்று!

**எதிர்விளைவை உண்டாக்கும் பேச்சுகள்!**

இவர்களுக்கும், இவர்களுடன் அடிமை முறிச் சாசனம் எழுதிக் கொடுத்து, மிரட்டலுக்கு அஞ்சியுள்ள அ.தி.மு.க. உள்பட சில கட்சியினரும் (இன்னமும் அங்கே இந்த இரண்டு கட்சிகள் தவிர, தேசிய ஜனநாயக கூட்டணி என்ற அவர்களது கூட்டணியில் முன்பு இருந்த பல கட்சிகளுக்கு, சேர பலமுறை அழைப்பு விடுத்தும் ஏமாற்றம் அடைந்த நிலையில்) இப்படி தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசுவது, தமிழ்நாட்டு மக்களின் மனோபாவம் தெரியாத, எதிர்விளைவை உண்டாக்கும் பேச்சு என்பதுகூடவா புரியாது - அந்த ‘மேதாவிகளுக்கு?’

திருப்பரங்குன்றத்தில் வேண்டுமென்றே மதக் கலவரத்தைத் தூண்டி, இவ்வாண்டு (2026) வரவிருக்கும் தேர்தலில் ‘வாக்கு வங்கி’யாக அதனை மாற்றிவிடலாம் என்று கனவு காணும் இந்த ‘மகா அறிவு ஜீவி’களுக்குப் பதில் சொல்வதற்கு ஒரு சாதாரண பகுத்தறிவுக் குடிமகனே போதுமே!

பக்தர்கள் வசதிக்காக - வழிபாட்டிற்காக, கோயில் சம்பிரதாயப்படி “தீபம்” ஏற்றவேண்டிய நாளில், முறையாக அங்கே ஏற்றிவிட்ட நிகழ்ச்சிக்கு ஏதாவது தடை - இடையூறு ஏற்பட்டதா? அதற்கு அரசால் ஏதாவது தடை விதிக்கப்பட்டதா?

திட்டமிட்டே பல ஆண்டுகளாக தங்களது இந்துத்துவக் கொள்கையைப் பரப்பிடவும், பல நூறு ஆண்டுகளாக அந்த தர்காவில் இஸ்லாமிய பக்தர்கள், அவர்கள் நிகழ்வை நடத்தி வருவதைத் தடுக்கவும், பழைய தூண் ஒன்றின்மேல் தீபமேற்றுவோம் என்று - இந்து மதவெறிக் கவசம் பூண்டு, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., ஹிந்து முன்னணியினரின் தொடர் முறையற்ற கிளர்ச்சிகளுக்கு எதிராகச் சட்டம் - ஒழுங்கு பாதுகாப்புக் கருதியும், மதச்சார்பின்மை என்ற அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுக்கவேண்டிய தலையாய கடமை -தமிழ்நாடு மாநில அரசுக்கு உண்டு என்ற முறையில்தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

இதைத் தேர்தலுக்கு ‘மூலதனமாக்கி’, தொடர் பிரச்சினைகளை உருவாக்கி திட்டமிட்டே மதக் கலவரமாக்கிக் கொள்ள, மூலையில் தள்ளப்பட்டு, முக்காடுடன் உள்ள அரைவேக்காடு அண்ணாமலைகளும் முயற்சித்துத் தோற்ற வரலாற்றை, ‘பிரதான்’ போன்ற ‘உலகமகா அறிவாளி’கள் அறியமாட்டார்களா?

**ஆணவத்தோடு ஒன்றிய அமைச்சர் பேசுகிறார்!**

திண்டுக்கல் மாவட்ட கோயில் பிரச்சினைத் தீர்ப்பு உள்ளிட்ட பிரச்சினைகளால், தமிழ்நாடு மதக் கலவர பூமியாக்கிவிடக் கூடாது என்பதால், நீதிமன்றத்தில் அமர்ந்து, மேல்முறையீடுகளில் (ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அளித்த தீர்ப்புக்குத்) தடை விதித்த நீதிபதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் உள்பட அனைவருமே, பொது நிலையாளர்களாக இருந்து திருப்பரங்குன்றத்தின் நடப்புகளைப்பற்றி கருத்துக் கூறிய அனைவருமே, ஒன்றிய அமைச்சர் பார்வையில் முட்டாள்களா?

பேசுங்கள், நிறைய! பல மடங்கு பேசுங்கள்; தமிழர்களை ‘முட்டாள்கள்’ என்று பேசுங்கள்; அது போதும்; ஆளும் தி.மு.க. அணி வாகை சூடி, மீண்டும் முன்புபோல உங்களது கட்சிகளைத் தோற்கடிக்க!

நாவடக்கமின்றிப் பேசும் இப்படிப்பட்ட ஆணவப் பேச்சுக்கு, நீங்கள் கொடுக்கவேண்டிய விலை மிக அதிகமாக இருக்கும் என்பதை இவ்வாண்டு (2026) நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் புரிய வைக்கும்!

இது உறுதி! உறுதி!!

**புரியாதவர்கள் அல்லர் தமிழ்நாட்டு மக்கள்!**

முன்பு, தமிழர்களைத் ‘திருடர்கள்’ (“கோயில் சாவியைத் திருடியவர்கள்”) என்றார் பிரதமர் மோடி - ஒடிசா தேர்தல் பிரச்சாரத்தில்! . அதுபோன்று பேசுவது ஒரு நாக்கு; தமிழ்நாட்டுக்கு வந்ததும் மற்றொரு நாக்கு, தமிழ் மொழிப் பெருமை, திருவள்ளுவர் பெருமை பற்றி மற்றொரு குரலில் தமிழினப் பெருமைகளைப் பேசும்!

இவற்றைப் புரியாதவர்கள் அல்ல தமிழ்நாட்டு மக்கள் - வாக்காளப் பெருமக்கள்!

நுனிக் கிளையில் அமர்ந்து, அடிக் கிளையை வெட்டும் மகா ‘அறிவுக் கொழுந்துகளே’, தமிழ்நாட்டிற்கு அடிக்கடி வந்து, இப்படி ஆணவப் பேச்சுகளைத் தரந்தாழ்ந்து கூறுங்கள்!

தமிழ்நாட்டில் ‘எஸ்.அய்.ஆர்.’ கைகொடுத்துவிடும் என்றும் தப்புக் கணக்குப் போடாதீர்!

புத்திக் கொள்முதலுக்கு ஆயத்தமாகுங்கள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.